செ.வெ.எண்: 36 நாள்: 18.07.2017

## பத்திரிக்கைச் செய்தி

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன இணையதள பதிவு பெற மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு :

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 18.09.2015 முதல் இணையதளம் வழியாக தாங்களாகவே http://www.udyogaadhaar.gov.in (or) www.msmeonline.tn.gov.in என்ற வலைதளத்தில் தமது தொழில் நிறுவன பதிவுகளை செய்து கொள்ள மத்திய அரசின் உத்யோக் ஆதார் கோரிக்கை (UAM) மற்றும் உத்யோக் ஆதார் ஒப்புகை (UAA) ஆகியவற்றை அறிமுகம் செய்து அத்திட்டம் செயல்பாட்டில் இருந்து வருகிறது. வங்கிகளில் கடன்கள் பெறவும், அரசு துறைகளில் மானியங்கள் மற்றும் சலுகைகள் பெறவும், தொழில் நிறுவனங்கள் தமது பொருட்களை ஏற்றுமதி செய்யவும் உத்யோக் ஆதார் ஒப்புகைகள் அவசியமாகும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமது விவரங்களை நேரடியாக இணையதளத்தில் பதிவேற்றி, ஒப்புகையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்காக அங்கீகரிக்கப்பட்ட இணையதள மையங்கள் ஏதுமில்லை. இணைப்பு ஆவணங்கள் யாவும் அளிக்கவும் வேண்டியதில்லை. உற்பத்தி/சேவை தொடங்கிய நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். உத்தேச தொழில் நிறுவனங்கள் பதிவு செய்ய வழி வகை இல்லை. நீலகிரி மாவட்டத்தில் இவ்விணையதளம் வாயிலாக 920 உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் பதிவு செய்து பயன்பெற்றுள்ளன.

ஆகவே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இத்தகைய உத்யோக் ஆதார் ஒப்புகைகளை பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,** அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

17/7/17.

மாவட்ட ஆட்சித்தலைவர்
நீலகிரி மாவட்டம்.